பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 08 திங்கட்கிழமை 22.01.2024 அதிர்வு 175

## மீண்டும் கூட்டமைப்பாக நாம் ஒன்றிணைவோம்!

### தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு சிறீதரன் பகிரங்க அழைப்பு

“2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறிருந்ததோ அவ்வாறான நிலையை 04

# தமிழ் மக்களுக்காக உங்களை முழுமையாக அர்ப்பணியுங்கள்!

## தன்னிடம் ஆசி பெற்ற சிறீதரனிடம் சம்பந்தன் எம்.பி. இப்படி தெரிவிப்பு



– சீ.ஏ.தமிழ்மாறன் –

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அக்கட்சியின் சிரேஷ்ட தலைவரான இரா.சம்பந்தனை இன்று நேரில் சந்தித்து ஆசி பெற்றார்.

கொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது சிறீதரனுக்குத் தனது வாழ்த்துக்களையும் சம்பந்தன் தெரிவித்தார்.

“இது மக்கள் பிரதிநிதிகளின் - கட்சித் தொண்டர்களின் தெரிவு. புதிய தலைவரான உங்களுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களும் நல்லாசிகளும் எப்போதும் இருக்கும். எங்களுடைய மக்களுக்காக உங்களை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படுவீர்கள் என்று நம்புகின்றேன்.” - என்று சம்பந்தன் கூறினார். 04

# அரசியல்வாதி உட்பட ஐவர் சுட்டுக்கொலை

## தென்னிலங்கையில் பயங்கரம்





தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின், பெலியத்த நுழைவாயிலுக்கு அருகாமையில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஐவர் பலியாகியுள்ளார்.

டிபென்டர் ரக வாகனத்தில் பயணித்தவர்களை இலக்கு வைத்தே வாகனமொன்றில் வந்தவர்கள் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர்.

நான்கு பேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர் எனவும், ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனவும் 04



# மலைநாட்டில் கடுமையான வெப்பம்; நீர் தேக்கங்களில் குறையும் நீர் மட்டம்!

(மஸ்கெலியா)

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் நிலவுவதால் அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டும் வெகுவாகக் குறைந்துள்ளது.

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட எட்டு அடி குறைந்துள்ளது என நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர, நவலக்சபான ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டும் வெகுவாகக் குறைந்துள்ளது.

இவ்வாறு வெப்பமான வானிலை தொடரும் பட்சத்தில் மலையக பகுதிகளில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது.

கடந்த சில மாதங்களாக மத்திய மலைநாட்டில் தொடர் மழையால் மலையக பகுதிகளில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட அதிகமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போலந்து நாட்டு உல்லாச பிரயாணி பாணந்துறை கடலில் மூழ்கி மரணம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாணந்துறை கடலில் குளித்துக் கொண்டிருந்த போலந்து நாட்டு உல்லாச பிரயாணி ஒருவர் கடந்த ஞாயிறு மாலை கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளார்.

61 வயதுடைய அல்பிரட் மிரோஸ்லா என்ற போலந்து நாட்டு பிரஜை, தான் தங்கியிருந்த பாணந்துறை நட்சத்திர ஹோட்டலுக்கு பின்னால் உள்ள கடலில் குளித்துக் கொண்டிருந்த போதே இந்தச் சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது



என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாணந்துறை தெற்கு பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேச முஸ்லிம் சாரணர் ஜம்போறி அமெரிக்கா ரெக்ஸாஸ் மாநிலத்தில்!

(எஸ்.அஷ்ரப்கான், ஏ.எம்.அஜாத்கான்)

சர்வதேச முஸ்லிம் சாரணரின் மூன்றாவது ஜம்போறி இந்த வருடம் ஜூன் 30 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 6 ஆம் திகதிவரை அமெரிக்காவிலுள்ள ரெக்ஸாஸ் மாநிலத்தின் ஹவுஸ்டன் நகரில் பிரமாண்டமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் கலந்துகொள்ளவுள்ள சர்வதேச ஊடக மையத்தின் அங்கத்தவர்களுக்கான இணையவழி பாராட்டு நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த மையத்தின் தலைவராக பங்களாதேஷைச் சேர்ந்த செய்யட் முஹம்மத் எஹ்திஸாம் நக்வியும் கௌரவ விருந்தினர்களாக டாக்டர் ஆயில் அப்துல்மஜீட், பொப் வெடிக், பிரேய் பர்னிஸ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்த மையத்தில் சர்வதேச ரீதியாக மொத்தம் 37 பேர் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர். இதில் இலங்கை சார்பாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய உப தலைவர், ஓய்வு பெற்ற உணவு மருந்து பரிசோதகர் எஸ்.தஸ்தகீர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.




# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுதானியப் பொங்கல் சிறுப்பிட்டியில்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தைப்பொங்கல் விழா சிறுதானியப் பொங்கல் விழாவாகச் சிறுப்பிட்டியில் கோலாகலமாக இடம்பெற்றுள்ளது.

சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (21) மாலை இராசபோசனம் என்னும் கருப்பொருளில் இந்தப் பொங்கல்விழா நிகழ்ந்துள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதவிருந்தினராகவும், யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் பொ. செல்வராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பாரம்பரிய உணவான சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குச் சிறுதானிய விதைகளை இலவசமாக வழங்கி அறுவடையின் பின்னர் அவர்களிடமிருந்து வழங்கிய விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகளை மீளப்பெற்று வேறு விவசாயிகளுக்கு வழங்குகின்றது.

இந்தத் திட்டத்தின் ஒரு படியாகவே அருகிப்போய்விட்ட சிறுதானிய உணவுப் பண்பாட்டை மீளுருவாக்கும் நோக்கில் தைப்பொங்கலைக் கிராமங்களில் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடி வருக்கிறது. இந்த ஆண்டு சிறுப்பிட்டி மேற்கில் ஜனசக்தி சனசமூக நிலையத்தினருடன் இணைந்து கொண்டாடியுள்ளது.

ஏராளமானோர் கலந்துகொண்ட சிறுதானியப் பொங்கல் விழாவில் உறியடி, வழுக்குமரம் ஏறுதல் ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்களோடு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. பங்கேற்ற அனைவருக்கும் வரகரிசிப் பொங்கலும் குரக்கன் கூழும் பரிமாறப்பட்டன.




# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் உலர் உணவுப் பொதிகள் வழங்கல்


(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை (16) நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீப் நிறுவனங்களின் பிரதிநிதியும் பொறியியலாளருமான எம்.சி.கமால் நிஷாத் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாகக் கிராம உத்தியோகத்தர் எம்.எஸ். எம். நளீர், சாய்ந்தமருது பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.சீ. முஹம்மட், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜே. றம்ஸான், அனர்த்த நிவாரண சேவைகள் உத்தி யோகத்தர் ஏ. அர்சாத் மற்றும் கிராம உத்தியோகத்தர்களான எம். எம்.மாஹிர், எல். நாஸர், எம்.என். எம்.சஜா, ஏ.எம். அஜ்ஹர், எம்.ஐ. ஜெஸ்மினா, எம்.எஸ்.ஐதாக், ஏ. நஜீமா, ஏ.கே. சானாஸ், ஐ.எம்.எப். சாஜிதா, எம்.எம்.எப். ஜெய்மி, எம்.ஏ.எம்.மிஸ்பாஹுல் ஹுதா, எஸ்.எம்.இல்பான், ஐ.எல்.எம்.சமீர் ஆகியோரும் இணைந்து இந்த உலர் உணவுப் பொதிகளை வழங்கினர்.

சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 174 குடும்பங்களுக்கு இதன்போது வழங்கப்பட்டன.

# தம்பியைக் கத்தரிக்கோலால் குத்தி கொலை செய்த கொடூர அண்ணன்




தனது தம்பியை அண்ணன் கத்தரிக்கோலால் குத்திக் கொலை செய்த கொடூர சம்பவம் கொழும்பு – பொரளையில் இடம்பெற்றுள்ளது.

பொரளை பகுதியைச் சேர்ந்த 55 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மது அருந்திக்கொண்டிருந்த வேளை மேற்படி நபருக்கும், அண்ணனுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, பின்னர் அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போதே அவர் தம்பியைக் கத்தரிக்கோலால் குத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### அரசியல்வாதி உட்பட...

தெரியவருகின்றது.

'எங்கள் மக்கள் கட்சி' என்ற அரசியல் கட்சியின் தலைவர் சமன் பெரேராவும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

டிபெண்டர் ரக வாகனத்தில் வந்தவர்கள், காலை உணவை உண்பதற்காக, ஹோட்டலொன்றுக்குச் சென்றிருந்த வேளையிலேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இது பாதாளக் குழுக்களுக்கிடையிலான மோதலால் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### மீண்டும் கூட்டமைப்பாக...

தமிழ் மக்களின் அரசியல் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலையை – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எய்த வேண்டும். எனவே, தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க் கட்சிகளும், தம் கட்சிகளின் நலனை முன்னிறுத்தாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஓரணியாக – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணையுமாறு அழைக்கின்றேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தலில் வெற்றி பெற்று புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட சிறீதரன், இந்தத் தேர்தல் தொடர்பிலும், தமிழரசுக் கட்சியின் எதிர்காலப் பயணப்பாடு தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது பெரு விருப்பம். அதனை முன்னிறுத்தியே தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இந்தநிலையில் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதற்பணியென எண்ணுகின்றேன்.

தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணி செய்த சக தமிழ்த் தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனி வழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது. அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் அசைக்க முடியாத சக்தியாக மிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்ட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெருவிருப்பம். எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் கடந்தகால கசப்பான நினைவுகளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ் மக்களின் நலனுக்காகவும், தமிழ்த் தேசியத்தின் நலனுக்காகவும் ஓரணியில் ஒன்றித்திருப்பது எம் முன்னால் உள்ள பெரும் பொறுப்பு. அதற்காகத் தமிழரசுக் கட்சி மட்டுமல்லாது, சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு உழைக்க வேண்டும். சகல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டைத் துரித கதியில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம்." – என்றார்.

### தமிழ் மக்களுக்காக...

கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், கட்சிக்குள் ஐக்கியம் அவசியம் என்பதையும் சம்பந்தன், புதிய தலைவரிடம் எடுத்துரைத்தார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் பல வருடங்கள் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.









# கவிதை நூல் வெளியிடப்பட்டது!



க.வசந்தகுமாரி எழுதிய ' வரங்க லெல்லாம் தவங்களாவதில்லை.' என்ற கவிதை நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் (20) கொழும்பு ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேஷன் கலந்து கொண்டார்.

நூலின் முதல் பிரதியை இலங்கை பொன்மனச்செம்மல் தாஜ்மஹறான் பெற்றுக்கொண்டார்.



# நூல் அறிமுக விழா!

(அபு அலா )

'அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, ராணி சீதரனின் "கடவுள்தான் அனுப்பினாரா" என்ற நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் (20) திருகோணமலை நகர சபை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.



அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் க. தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவுக்கு பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற அதிபர் சிரேஷ்ட ஊடகவியலாளர் நவம்கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக வைத்திய லிங்கம் ஜெயச்சந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி சுபாசினி சித்திரவேலு, இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் க.பிரபாகரன், நிதிக் கணக்காளர் தயாளலிங்கம் பிரசாதனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சனிப் பார்வை

'ஆமை புகுந்த வீடும், அமீனா நுழைந்த வீடும் விளங்காது' என்பார்கள்.

ரணில் விக்கிரமசிங்க புகுந்த அணியும் அப் படித்தான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ராசி அப்படி. 'சனிப் பார்வை' என்பார்களே. அந்த மாதிரி.

அவர் கண் பட்ட தரப்புகள் எல்லாம் பிளவு பட்டுத் தொலைப்பது வழமையாகி விட்ட மையால் அதை சனிப்பார்வை என்று சொல்வது தப்பில்லைத்தானே...!

முன்னர் தான் சேர்ந்த - தான் பழகிய - தரப்புகளைப் பிரிக்கும் தந்திரம்தான் அவருக்குக் கை வந்திருந்தது.

காலப்போக்கில் தாம் சார்ந்த - தமது - கட்சியையே பிளவு படுத்தி நலிவுபடுத்தும் கைங்கரியத்தைக் கூட அவர் ஒப்பேற்றினார்.

இப்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, அதற்கு அரசியலில் ஏற்பட்ட பெரும் நெருக்கடியைச் சமாளிக்க அவரை அரவணைத்தது.

பிறகு என்ன? சனிப் பார்வை மொட்டுக் கட்சி மீது விழுந்து விட்டது. இப்போது அக்கட்சி அந்தப் பார்வையின் கோளாறினால் தடுமாறு கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் ஏற்பட்டிருந்த கருத்து மோதல் தற்போது கட்சிக்குள் பூதாகர உருவெடுத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கி ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என வெளிப்படையாக அறிவித்துவரும் நிலையில், அது அவர்களின் தனிப்பட்ட கருத்தே தவிர கட்சியின் நிலைப்பாடு அல்லவென மேலும் சில மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிவருகின்றனர்.

அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, விதுர விக்ரமநாயக்க மற்றும் இரா ஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர உட்பட மேலும் சில உறுப்பினர் கள் ரணில் விக்கிரமசிங்க களமிறங்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டு வருகின்றனர்.

எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளரான சாகர காரியவசம், நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ரோஹித அபேகுணவர்தன போன்றவர்கள், ரணிலுக்கான ஆதரவை வெளிப்படுத்த மறுத்து வருகின்றனர்.

தாம் ரணிலை ஆதரிக்கபோவதில்லை என்பதை வெளிப்படையாக அறிவிக்க மறுக்கும் அவர்கள், ரணிலுக்கு ஆதரவு வழங்கும் உறுப்பினர்களின் கருத்து கட்சியின் நிலைப்பாடு அல்லவெனக் கூறிவருகின்றனர்.

ஆக, ரணில் விக்கிரமசிங்கவை அக்கட்சி முன்னிறுத்தியமையால் அக்கட்சிக்குள் குழப்பம் என்பது தெளிவாகி வருகின்றது.

தமிழர் தரப்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவுடன் சகவாசம் வைக்கும் கட்சிகளின் கூட்டுகளுக்குள் புகைச்சல் தன்பாட்டில் கிளம்புவது அவதானிக்கப்பட்டு வருகின்றது.

அது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ராசியா அல்லது பண்பியல்பின் பெறுபேறா அல்லது நினையாப் பிரகாரமாக நடக்கும் செயலா என்பதை உறுதிப்படுத்துவதும் கஷ்டமாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கை அரசுடன் நீண்ட யுத்தத்தைப் புரிந்து வந்த விடுதலைப் புலிகள் அமைப்பு 2002 - 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையி லான அரசுடன் சமரசப் பேச்சுக்கு இணங்கியது. 2002 இலும் 2003 இலும் ஆறு சுற்றுச் சமரசப் பேச்சுக்கள் தாய்லாந்து, நோர்வே, ஜப்பான், ஜேர்மனி ஆகிய நான்கு நாடுகளில் நடந்தன.

ரணிலின் அரசுடன் ஒரு மேசையில் அமர்ந்த ராசியோ என்னவோ, 2004 இல் விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் பெருவெடிப்பு - பிளவு - ஏற்பட்டது.

மட்டக்களப்புத் தளபதி கருணா அமைப்புக்குத் துரோகம் செய்து, இயக்கத்தைப் பிளவுபடுத்த, அதன் விளைவாக தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமே அழிந்து நாசமானது.

புலிகள் இயக்கத்தில் இருந்து கருணாவைப் பிரித்தது ரணிலின் தந்திரமே என்று 2004 பொதுத் தேர்தல் பிரசாரத்தில், அதற்கு முந்திய ரணிலின் அரசில் முக்கிய இடம் வகித்த நவீன் திஸநாயக்கா பகிரங்கமாக உரையாற்ற, அது பெரும் சர்ச்சையா னதும் குறிப்பிடத்தக்கது.


ரணில் விக்கிரமசிங்கவுடன் அணிசேர அல்லது சேர்ந்து இயங்க முயலும் தரப்புகளின் கதி அதோ கதிதான் போலும்.

# கிழக்கு மாகாண ஆளுநருக்கு கவிஞர் வைரமுத்து வாழ்த்து!

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளு நர் செந்தில் தொண்டமான் அன்று மகாகவி பாரதியார் சொன் னதை இன்று நடை முறைப் படுத்தி வருகிறார் என்று கவிஞர் வைரமுத்து வாழ்த்து தெரிவித் துள்ளார்.

கவிஞர் வைரமுத்து, தமிழ் பாரம் பரியத்தை மீட் டெடுத்த ஆளுநர் செந்தில் தொண்ட மானைஅக மகிழ்ந்து பாட்டெ டுத்து தனது டுவிட்டர் பதிவில் வாழ்த்தியுள்ளார்.





# நீர்கொழும்பு கடற்கரையில் விசேட சுத்தப்படுத்தும் திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நமது இயற்கைச் சூழலைப் பாது காப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, நமது சமூகத்தில் நேர் மறையான தாக்கத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ள எக்ஸ்டமினேற்றர் பீ.எல்.சி. நிறுவனம் குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்த அயராது உழைத்து வருகிறது.

இதில் ஒரு கட்டமாக நிர்கொழும்பு பிரபலமான கடற்கரையின் அழகை அனைவரும் ரசிக்கும் வகையில் பராம ரிக்க உதவியது.

கூட்டு நடவடிக்கையின் சக்தியின் நமது கடற்கரைகளைப் பாதுகாப்பதற்கு நாங்கள் எடுத்துள்ள முயற்சிகளில் எங்களுடன் சேர மற்றவர்களை ஊக்கு விக்கிறோம்.

நம் பெருங்கடல்கள் மற்றும் கடற் கரையோரங்களைச் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதில் மன நிறைவு அடைகின்றோம்.

நாம் அனைவரும் இணைந்து உண்மையான மாற்றத்தை தலைமுறை தலைமுறையாக உருவாக்க முடியும் என்று இதன்போது அவர்கள் தெரிவித் துள்ளனர்.



# மட்டக்களப்பு பிள்ளையாரடியில் வாகனம் குடை சாய்ந்தது!

(பழுவூரான்)

சாமான்களை ஏற்றி வந்த கொள் கலன் வாகனம் ஒன்று மட்டக் களப்பு பிள்ளையாரடியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (21) குடை சாய்ந்ததில் அதி லிருந்த பொருள்கள் யாவும் வீதியில் சிதறின.

வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியின் நித்திரைத் தூக்கமே இந்த நிலைமை ஏற்படக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது வாகனத்தைச் செலுத் திய சாரதி மற்றும் நடத்துனர் காயம டைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை மட்டக்களப்பு போக்குவரத்துப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.




# உலகின் அரசியல் சமன்பாடு தலைகீழாக மாறியிருக்கிறது!

## தமிழகத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

5ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த மேலைத்தேயம் எங்களுடைய நாடுகளை ஆக்கிரமித்து, வளங்களைச் சூரையாடி, போதாக் குறைக்கு இந்த நவீன யுகத்திலும் இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு பலவந்த குடியேற்றத்தின் ஊடாக பயங்கரவாதத்தை மத்திய கிழக்கில் இன்று கட்டவிழ்த்து விட்டு இருக்கின்ற நிலையில் இந்த உலகின் அரசியல் சமன்பாடு தலைகீழாக மாறிக் கொண்டிருக்கின்றது.

தமிழகம், தஞ்சை மாவட்டம், பாபநாசத்தில் கடந்த 16 ஆம் திகதி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் திருச்சி மண்டல பயிலரங்கு கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தலைமையில் நடைபெற்றது.

அதில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

“சர்வதேச உறவுகளில் முஸ்லிம் சமூதாயம்” என்ற தலைப்பில் உரையாற்றச் சொன்னார்கள். இன்று எமக்கு ஏன் சர்வதேச உறவு? என்று கேட்கத் தோன்றுகின்றது. பலஸ்தீனத்தில் நடக்கின்ற அரக்கத்தனமான தாக்குதல்களைத் தடுக்க முடியாத சர்வதேசத்தில் எமக்கு என்ன கிடைக்கப் போகின்றது ? என்ற அங்கலாய்ப்போடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இப்படியான அநியாயங்களுக்கு ஆங்காங்கே இன்று துணை போகும் சக்திகளோடு உறவாடிக் கொண்டிருக்கின்ற எங்கள் அரசுகளைப் பற்றி உங்களுக்கு எதற்கு இந்த உறவு என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த அரக்கத்தனமான, மிலேச்சத்தனமான, எந்த மனிதாபிமானமுமற்ற இந்த நடத்தைகளைக் கண்டித்து எதுவுமே செய்ய முடியாமல் மௌனித்துப் போய் இருக்கும் ஆட்சியாளர்கள் நிறையப் பேர் இருக்கும் உலகில் மனிதநேயம் எங்கே போய் விட்டது என்று இருக்கின்ற ஒரு கட்டத்தில் எதற்கு இந்த சர்வதேச உறவுகள்?.

இன்று இந்த சியோனிஸ அரக்கர்களுக்கு துணையாக இருக்கும் மேலைத்தேய நாடுகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். சர்வதேசத்தை ஆட்டி படைத்துக் கொண்டிருந்த வல்லரசுகள் இன்று செய்வதறியாமல் தடுமாறிப் போய் இருக்கின்றன.

20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் செய்யக் கூடிய அநியாயங்கள் அட்டூழியங்கள் அனைத்தையும் செய்து ஈற்றில் வாலை சுருட்டிக் கொண்டு ஓட வேண்டிய நிர்க்கதி நிலைக்கு உள்ளான இந்த அமெரிக்கர்கள், இன்று உக்ரைனில் வேண்டுமென்றே யுத்தத்தையும் உருவாக்கி, அந்த யுத்தத்தால் இன்று முழு உலகிலும் விலைவாசிகள் அதிகரிக்கும் ஓர் ஆபத்தை ஆக்கித்தந்துள்ளது. இன்னுமின்னும் அந்த யுத்தத்துக்குக் கோடிக் கணக்கில் தனது நாட்டு மக்களின் வரிப்பணத்தை வாரி இறைத்து, போதாக்குறைக்கு ஈனத்தனமாக, ஈவிரக்கமில்லாமல் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளையும், பெண்களையும், வயோதிபர்களையும் கொன்று குவிக்கும் இஸ்ரேலர்களுக்கு அனைத்து ஆயுத பலத்தையும் கொடுத்துதவியுள்ளது. இவர்களையா ஏக வல்லரசு என்று சொல்லிக் கொள்வது? இவர்களுக்கு உடந்தையாக எவர் இருந்தாலும் எந்த அரசு இருந்தாலும் அவர்களை இறைவனின் சாபம் சும்மா விட்டுவிடாது என்பதையும் நான் இங்கு சொல்லியாக வேண்டும்.

எனவேதான், நெருக்கடிகளை சிறுபான்மையினர் எல்லா இடங்களிலும் சந்திக்கின்றோம். சிறுபான்மை என்பதற்காக எங்களை சிறுமைப்படுத்தி எங்களை ஒடுக்கி ஆள இந்த நவீன யுகத்தில் எவருக்கும் அருகதை கிடையாது. 15ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த மேலைத்தேயம் எங்களுடைய நாடுகளை ஆக்கிரமித்து, வளங்களைச் சூரையாடி, போதாக் குறைக்கு இந்த நவீன யுகத்திலும் இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு பலவந்த குடியேற்றத்தின் ஊடாக பயங்கரவாதத்தை மத்திய கிழக்கில் இன்று கட்டவிழ்த்து விட்டு இருக்கின்ற நிலையில் இந்த உலகின் அரசியல் சமன்பாடு தலைகீழாக மாறிக் கொண்டிருக்கின்றது.

பாரத பிரதமர் சார்பிலே ஈரானோடு பேச்சு நடப்பதாக பார்த்தேன். ரஷ்ய அதிபரோடு பேச்சு நடக்கிறது. இதைத்தான் பாரதம் செய்ய வேண்டும். ரஷ்யாவோடு கூட்டு வைக்க வேண்டாம் என்று அமெரிக்கா சொன்னதையும் கேட்காமல், அந்த உறவைப் பேணுகிறார்கள்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# உலகின் அரசியல் சமன்பாடு தலைகீழாக மாறியிருக்கிறது!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடுநிலைமை பேணப்பட வேண்டும். அது மட்டுமல்ல. சீனாவோடும் பகைமை பாராட்ட வேண்டிய அவசியமில்லை. இது "ஆசியாவின் யுகம்" என்று சொல்கின்றார்கள். உங்களுடைய வெளியுறவுத்துறை அமைச்சர் நண்பர் ஜெய்சங்கர் "இந்தியாவும் சீனாவும் கூட்டு சேரவில்லை என்றால், ஆசியாவின் யுகம் சாத்தியமாகாது" என்கிறார். அவர் யதார்த்தத்தை பேசுகின்றார். அந்த யதார்த்தத்துக்கு அவர் உயிர் கொடுக்க வேண்டும். இந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏமாற்று வித்தைகளுக்கு இந்தியா சோரம் போய்விடக் கூடாது. ஏன் என்றால் பாரதம் சாமானியமான ஒரு தேசம் அல்ல.

மத்திய கிழக்கில் மாத்திரம் ஏறத்தாழ 10 கோடியை அண்மித்த எம்மவர்கள் தொழில் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதில் 60 சதவீதத்தினர் தங்களுடைய உடலை வருத்தி, வியர்வை சிந்தி உழைக்கின்ற இந்த பாரதத்தின் மக்கள். அதில் 20 சதவீதமானவர்கள் தொழில்வாண்மை பெற்றவர்கள். பல்வேறு துறைகளில் தேர்ச்சி அடைந்தவர்கள். 20 சதவீதம் என்பது ஒரு சாமானிய பங்கல்ல. கிட்டத்தட்ட 2 கோடிக்கும் மேற்பட்டவர்கள். இன்று மத்திய கிழக்கு நாடுகளில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்கள் உழைத்து அனுப்புவதில் பணமாக மாத்திரம் 35 பில்லியன் டொலர்கள வருமானமாகப் பாரதத்துக்கு வருகின்றது. இப்படி இருக்கும் நிலையில் இஸ்ரேலோடு எங்களுக்கு என்ன உறவு தேவை? இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியில் உங்களது நாட்டின் வெளியுறவு கொள்கையை பற்றி பேசுவதற்கு எனக்கு அருகதை கிடையாது. ஆனால், சில யதார்த்தங்களை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாகிஸ்தானில் குவார்தா என்ற ஒரு துறைமுகம் சீன உதவியோடு கட்டப்படுகின்றது. அதற்கு போட்டியாக இந்தியா ஈரானோடு அங்கு ஒரு துறைமுகத்தை அரேபிய கடலில் அமைப்பதற்கான ஒப்பந்தம் பல வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்டது. செய்து விட்டு இந்த அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் திருப்திக்காக ஈரானோடு உள்ள உறவுகளை கொஞ்சம் வைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் பாரதத்தின் சார்பில் ஈரானுக்கு ஒரு தூதுக்குழு போய் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றது. அது சாத்தியப்பட வேண்டும். அந்த துறைமுகம் சாத்தியமானால், இன்று சூழவும் கடல் இல்லாமல் நிலத்தால் சூழப்பட்டிருக்கும் ஆப்கானிஸ்தானுக்கு நிலவழி மார்க்கம் பாகிஸ்தான் ஊடாக அல்லாமல் ஏற்படலாம்.

பாகிஸ்தானுக்கு கூட 5 பில்லியன் டொலர் பெறுமதியான இந்திய பண்டங்கள் மத்திய கிழக்கின் ஊடாக போகின்றது என்பதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இது சாதாரணமான ஏற்றுமதியல்ல. பாகிஸ்தானுக்கும் நேரடியாக அல்லாமல் மறைமுகமாக ஏற்றுமதிகள் போகின்றன. இலங்கை முஸ்லிம்கள் பட்டிராத பிரச்சினையா? கடந்த 2, 3 வருட காலமாக முழு இலங்கை முஸ்லிம்களும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டோம். ஒரு சிறு கும்பல் செய்த காரியத்துக்காக முழு முஸ்லிம் சமூகமும் பாதிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கில் இளைஞர்கள் கொண்டு போய் சிறையில் அடைக்கப் பட்டார்கள்.

இங்கு தமிழகத்தில் கோவையில் நடந்ததை போலத்தான். அந்த அநியாயத்துக்குப் பிறகு நிறைய நெருக்கடிகளை சந்தித்தோம்.கொவிட் -19 தொற்றால் இறந்தவர்களது உடல்களைக் கூட எங்களின் சமய ஆசாரப்படி நல்லடக்கம் செய்ய முடியாமல் எரிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போது, முழு முஸ்லிம் சமூகமும் அங்கலாய்த்தது. கெஞ்சிக் கேட்டது, அதை எங்களுடைய முன்னாள் ஜனாதிபதி நிராகரித்தன் விளைவு, எங்களின் இறைஞ்சுதலின் பலன் ஈற்றில் ஜனாதிபதி தனது பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு அவசரத்தில் துறைமுகத்துக்குச் சென்று கப்பலிலே ஏறி தப்பி ஓடினார் இந்த நிலைமைக்கு மக்கள் எழுச்சி அவரைத் துரத்தியடித்தது.

எனவே துன்புறுத்துகின்ற தலைவர்கள் இருந்தால் அதைப்பற்றி அலட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இறைஞ்சுங்கள். எனவே, மத சார்பற்ற அணி ஆட்சிக்கு வரப்போகின்றது. அவ்வாறு வரும் காலம் தூரத்தில் இல்லை. மாநிலங்கள் மீண்டும் கைகளுக்கு வந்திருக்கின்ற ஒரு சூழல் நிலவுகின்றது. ஆந்திரா, கர்நாடகா , கேரளம், தமிழகத்துக்கும் மாத்திரம்தான் ஆட்சியா என்ற நிலைமை மிக விரைவில் மாறிக் கொண்டு வருகின்றது.

எனவே , இந்த அணி வெற்றி பெறும். இந்த வெற்றி பெறுகின்ற அணியில் உங்களுக்கும் உங்களது பங்கை தளபதி தருவார். அதை தருகின்ற போது அவற்றில் இருக்கின்ற முழுப் பயனையும் பொறுப்பையும் இந்த சமூதாய நலனுக்காக மட்டுமல்ல, அயல் நாட்டில் இருக்கின்ற எங்களது நலனுக்காகவும் சேர்த்துச் செய்யுங்கள்.-என்றார்.

# கற்பிட்டி ஸ்ட்ரேபோட் சர்வதேச பாடசாலையில் வீட்டுத்தோட்டம்

(கற்பிட்டி செய்தியாளர்)

கற்பிட்டி ஸ்ட்ரேபோட் சர்வதேச ஆங்கில பாடசாலையில் வீட்டுத்தோட்டம் அமைத்தல் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கோடு பாடசாலையின் சுற்றாடல் முன்னோடிகளால் பாடசாலையின் வளாகத்தினுள் வீட்டுத் தோட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கற்பிட்டி ஸ்ட்ரேபோட் சர்வதேச ஆங்கில பாடசாலையின் அதிபர் எம். ஆர் பேகம் றம்ஸானியின் ஆலோசனைக்கு அமைய சுற்றாடக் குழு பொறுப்பாசிரியர்களின் ஒத்துழைப்புடன் மிகவும் ஆழகிய முறையில் தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



வீட்டுத் தோட்டம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மிகவும் வரவேற்பை பெற்றுள்ளது என்றும் ஆர்வத்துடன் இதனை மாணவர்கள் முன்னெடுக்கின்றனர் என்றும் அதிபர் மேலும் தெரிவித்தார்.




## சர்வதேச போர்க்குற்ற விசாரணை:

# தமிழருக்கு ஒரு நீதி? பாலஸ்தீனருக்கு வேறு நீதியா?

■ நவீனன்

ஈழத்தில் 2009 போரின் இறுதிக் கட்டத்தில், இலங்கை ராணுவம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்காக சர்வதேச போர்க்குற்ற விசாரணை கோரப்பட்டது. ஆனால் இதுவரை இலங்கை அரசு இதுவரை முழுமையான பொறுப்புக் கூறலை ஏற்க மறுத்துவருகிறது.

நிகழ்காலத்தில் காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கைகள் இனப் படுகொலை தன்மை கொண்டவையாகும் என்றும் பாலஸ்தீன தேசத்தவர்கள் மற்றும் பாலஸ்தீனிய இனக் குழுவின் பெரும் பகுதியினரை அழிக்கும் நோக்கில் தாக்குதல் நடத்தப்படுகிறது என்றும் தென் ஆபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருக்கிறது.

இதுவரையில் ஈழத் தமிழர்களின் மேலான போர்க் குற்றங்களுக்கு எவரும் விசாரிக்கப்படவும் இல்லை, தண்டிக்கப்படவும் இல்லை என்பதே உண்மை. தற்போது பாலஸ்தீன மக்களுக்கு எத்தகைய நீதி கிடைக்கும் என்பது ஐ.நாவின் அதிகார சக்திகளின் (வீட்டோ- ஏநுவுழ) கைகளிலேயே உள்ளது.

இலங்கை அரசுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை மூலம் ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட, 30/1 மற்றும் 40/1 தீர்மானங்களில் இருந்து விலகுவதாக, 2019இல் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.





மேலும், 2015 ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் மனித உரிமை பேரவையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு, அப்போதைய இலங்கை அரசு உடன்பட்டமை நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல் என ராஜபக்ஷ தெரிவித்தார்.

போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதாகவும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்குவதாகவும் இலங்கை அரசு ஒப்புக் கொண்டதற்கான நம்பிக்கையையே ஐ.நா. தீர்மானங்கள் வெளிப்படுத்தின.

### ஐ.நா.மனித உரிமைகள் சபை

ஆனால் அவற்றில் இருந்து விலகியதாக இலங்கை அறிவித்துள்ளதால், போர்க் குற்றங்கள் தொடர்பான நீதி விசாரணை நடக்குமா என்ற கேள்வி இலங்கைத் தமிழர்களிடத்தில் எழுந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், 47 நாடுகளால் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலிருந்து இலங்கை அரசு விலகியதால் அந்த நாடுகள் இலங்கையைக் கண்டித்தன.

அத்துடன் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் மீதான அழுத்தங்கள் அதிகரிக்கவும் வேண்டின.

தமிழர்களுக்கு நீதி கிடைக்க, ஐ.நா. மீது மட்டுமே தங்களது இறுதி நம்பிக்கையை வைத்துள்ளனர் இலங்கைத் தமிழர்கள். அத்துடன் ஐ.நா. நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்பதே, உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து தவிக்கும் இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

### இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றத்தில் இஸ்ரேல்

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும்

தொடர்ச்சி ▼

# தமிழருக்கு ஒரு நீதி? பாலஸ்தீனருக்கு வேறு நீதியா?

**தொடர்ச்சி▲**

மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க, பாரிய பங்கைக் கொண்டிருந்தன என்று மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும் Yesh Gvul kw;Wk; Torat Tzedek (Israeli human rights organisations Combatant for Peace) ஆகிய செயற்பாட்டாளர்கள் திரட்டிய சான்றுகள், இலங்கையில் நடந்த அட்டூழியங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை தெளிவாக வெளிப்படுத்து உள்ளனர்.

**இலங்கையின் போர்க் குற்றங்கள்**

இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு இஸ்ரேல் உடந்தையாக இருந்தமை பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை மூலம் இந்த மனித உரிமை அமைப்புகள் கோரியுள்ளன.

இலங்கைளின் உள்நாட்டுப் போரின் போது, இஸ்ரேல் ஆயுதங்களை விற்று, இலங்கை இராணுவம் கடுமையான அட்டூழியங்களைச் செய்யும் போது அதற்கு ஆதரவாக இருந்தது என்று தற்போது பல குற்றச்சாட்டுக்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் மனித உரிமை அமைப்புகள் எழுப்பியுள்ளன.

**இஸ்ரேலுக்கு எதிராக தென்னாப்பிரிக்கா வழக்கு**

தற்போது காசா போரில் இஸ்ரேல் இனப்படுகொலையில் (South Africa Genocide Case Against Israel) ஈடுபட்டு வருகிறது என்று தென் ஆபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறது.

காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கைகள் இனப்படுகொலைத் தன்மை கொண்டவையாகும் என்றும் பாலஸ்தீன தேசத்தவர்கள் மற்றும் பாலஸ்தீனிய இனக் குழுவின் பெரும் பகுதியினரை அழிக்கும் நோக்கில் தாக்குதல் நடத்தப்படுகிறது என்றும் தென் ஆபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

பாலஸ்தீனர்களைக் காஸாவில் கொலை செய்து உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கிறார்கள். அவர்களை உடல் ரீதியான பாதிப்படையச் செய்து திட்டமிட்டு அவர்களின் வாழ்க்கை சூழலை மோசமாக்குவது சந்தேகமளிக்கிறது, என்று தென் ஆப்பிரிக்கா அழுத்தமாக தனது எதிர்ப்பை பதிவு செய்து இருக்கிறது.

ஏற்கனவே காசா மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்கள் நிற வெறி தாக்குதல்களுக்கு ஈடானவை என பல நாடுகள் விமர்சித்திருந்தன. இஸ்ரேலும், தென் ஆபிரிக்காவில் ஐ.நாவின் உறுப்பினர்களாக






உள்ள நிலையில், தென் ஆப்பிரிக்க அரசு தொடர்ந்திருக்கும் வழக்கு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

**சர்வதேச நீதிமன்றில் காசா இனப்படுகொலை !**

இஸ்ரேல் இனப்படுகொலையைத் தொடர்ந்து செய்வதாகத் தென்னாபிரிக்கா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று இஸ்ரேல் நிராகரித்துள்ளது. இந்த நிலையில் சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிரான தென்னாப்பிரிக்காவின் இனப்படுகொலை வழக்கின் இரண்டு நாள் பொது விசாரணை (11.01.2024) நடைபெற்றது.

அத்துடன் குறித்த வழக்கைக் கொண்டு வந்ததற்காகத் தென்னாபிரிக்காவைக் கடுமையாகச் சாடிய இஸ்ரேல் இந்த வழக்கை “அபத்தமானது” என்றும் இது “இரத்த அவதூறு” என்றும் கூறியுள்ளது.

காசா மீதான இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் இடைநிறுத்த வேண்டும் என்பதற்கான அவசர நடவடிக்கைகள் அவசியம் என்று தென்னாபிரிக்கா விடுத்துள்ள வேண்டுகோள் குறித்தே சர்வதே நீதிமன்றம் விசேடமாக ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**30 ஆண்டு காலப் போரும் 15 ஆண்டுகள் நீதி மறுப்பும்!**

இலங்கை மேற்கொண்ட போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 30 ஆண்டுகால மோதலால் அழிக்கப்பட்ட நாட்டின் சில பகுதிகளில் அமைதியின் சாயல் அரிதாக திரும்பியிருந்தாலும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்பதே உண்மை.

பல ஆண்டுகளாக, ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் போரின் போது நடந்த போர்க் குற்றங்களைச் சிரத்தையுடன் ஆவணப்படுத்தியுள்ளன. அரச படைகளால் நடத்தப்பட்ட அட்டூழியங்கள் மீது ஐ.நாவின் கவனம் முக்கியமாக இருந்தது.

ஆனால் இலங்கை அரசுக்கு ஆதரவான நாடுகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த போர்க் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்திருக்கலாம் என்பது பற்றி அதிக கவனம் செலுத்தப்படவில்லை. ஆயினும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்பது நீண்டு தொடரும் வரலாற்றுத் துயராகும்.





# தொழில் வழிகாட்டல் செயலமர்வு

(நூருல் ஹுதா உமர் )

ஸ்ரீ லங்கா மனித மேம்பாட்டு அமைப்பு மற்றும் வை.எம்.எம்.ஏ. மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டில் கே.டி.எம்.சி. நெனசல, கல்முனை கல்வி நிறுவனத்தின் மூலமாக தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் மேம்படுத்தல் சம்பந்தமான செயலமர்வு அமைப்பின் பணிப்பாளரும், வை.எம்.எம்.ஏ. மாவடிப்பள்ளிக் கிளையின் தலைவருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் கே.டி.எம்.சி. கல்வி நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

செயலமர்வில் வளவாளராக சம்மாந்துறை பிரதேச செயலக மென்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச். எம்.எஸ். இர்பான் மௌலானா கலந்து கொண்டு இளைஞர் யுவதிகளுக்குக் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் எதிர்கால கல்வி மற்றும் தொழில் நுட்பங்கள் பற்றி விரிவுரையாற்றினார்.

கே.டி.எம்.சி. நெனசல கல்முனை கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எம். ஹாஜா, கல்வியின் தற்போதைய நிலை, தொழில் வழிகாட்டல், எதிர்கால இளைஞர்களின் சிந்தனை, தனியார் கல்வியின் அனுகூலம் என பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கிழக்கின் கேடய அமைப்பின் தலைவரும், அக்கறைப்பற்று மாநகரசபை முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கலந்து கொண்டார்.

அதிதிகளாகக் கிழக்கு மாகாண ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்– மீஷான் பௌன்டேஷன் தவிசாளருமான நூருல் ஹுதா உமர், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. கிளையின் தலைவர், மனித மேம்பாட்டு அமைப்பின் பிரதிப் பணிப்பாளர், உயர்பீட உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இங்கு கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



# மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா

(மன்னார் நிருபர்)

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழர் தைத்திருநாள் பொங்கல் விழா நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) காலை மன்னார் வாழ்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந் தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேசச் செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு, ஓய்வு நிலை மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிறப்புப் பேச்சாளராக மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராசா கலந்து கொண்டார்.

நிகழ்வில் நடனம், கிராமிய நடனம், கவிதை, கிராமியப்பாடல் மற்றும் சிறப்பு பட்டிமன்றம் ஆகியவை இடம்பெற்றன.

கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு மன்னார் தமிழ்ச் சங்கத்தால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.





# கண்டியில் பொங்கல் விழா!

(பொகவந்தலாவ நிருபர்)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரும் நீர்வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமுக அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஏற்பட்பாடு செய்த தைப் பொங்கல் விழா நேற்று (21) ஞாயிற்றுக் கிழைமை ஹட்டன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அமைச்சர் ஜீவன்தொண்டமான் தலைமையில் இடம் பெற்ற பொங்கல் விழாவில் மத்திய மாகாண ஆளுனர் லலித்யூ கமகே, இலங்கை தொழிலாளர் காங்ரஷின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், வடக்கு மாகாண ஆளுனர் ஜால்ஷ் நிர்மலன், இந்து கலாச்சார அமைச்சர் விதுருவிக்ரம ரத்ன, மற்றும் இந்திய நடிகைலான மீனாட்சி, ஜஷ்வரியா தத்தா, சங்யூத்தா, ஜஷ் வரியா ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதிகள் ஹட்டன் மணிகூட்டு கோபுரத்தில் இருந்து டன்பார் மைதானம் வரை மேளவாத்தியங்களோடு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது பொங்கல் விழாவில் 1008 பொங்கல் பானைகளில் பொங்கல் பொங்கினர். ஹட்டன் கல்வி வலையத்தில் உள்ள 300 பாடசாலை மாணவர்களை ஒரே தடைவையில் ஏற்பாடு செய்யப்பட்ட நடன நிகழ்வு, தப்பிசை, சிலம்பாட்டம் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.












# கிண்ணியாவில் பாடசாலைக்கு நீர்த்தாங்கி அமைக்க அடிக்கல்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிண்ணியா நத்வதுல் புஹாரி அரபுக் கல்லூரி நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யின் ஏற்பாட்டில் ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நீர்த்தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச சபையின் முன்னால் தவிசாளர் எம். எச் சனூஸ், ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் பிரதிநிதிகள், கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.



# அடம்பன் பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அடம்பன் பிரதேசத்தில் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார், அடம்பன், கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் பிரதேச முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# அபிவிருத்தி அரசியல் மயப்படுத்தப்பட்டால் ஐ.எம்.எம். உதவி நிறுத்தப்படும் நிலைவரும்

## ரிசாட் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

ஐ.எம்.எம். திட்டம் வருகின்றபோது அபிவிருத்தி , நல்வாழ்வு திட்டங்களை அரசியல் மயப்படுத்த வேண்டாம் என்று கூறப்பட்டிருந்தபோதும் மன்னார் மாவட்டத்தில் அவை நேர் மறையாகவே காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளால் ஐ.எம்.எம். உதவி நிறுத்தப்படும் நிலைமை ஏற்படும் என்று முன்னாள் அமைச்சரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள அமைப்புக்கள் சிலவற்றுக்குத் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் உதவிகள் வழங்கினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும் பொது இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

2021 ஆம் ஆண்டு பண்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின், எனது நிதியில் இருந்து இந்தப் பகுதியில் 16 திட்டங்களுக்கு இங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் எட்டு அமைப்புக்கள் என்னுடன் தொடர்பு கொண்டு அவர்கள் உடன் இந்த உதவியை வழங்குங்கள் என தெரிவித்து அக்காலத்திலேயே பெற்றுக் கொண்டனர்.

ஆனால் இங்கு வந்திருக்கும் ஏனையோர் பொறுமையாக இருந்து இன்று அவற்றை பெறுவதற்காக வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாந்தை பிரதேசம் விவசாயிகள் நிறைந்த ஒரு பிரதேசம். தற்பொழுது இவர்கள் மிகவும் கஷ்ட நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

நமது ஆட்சியாளர்கள் எமது நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டனர். நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து காணப்படுகின்றது.

எமக்கு உணவு வழங்கிவரும் விவசாயிகளை வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதற்கு வழி சமைக்கப்பட்டிருந்தது.

இந்தத் துர்பாக்கிய நிலையால் விவசாயிகள் மட்டுமல்ல எமது நாடும் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகியது. இதனால் சர்வதேச மட்டத்தில் ஒரு கறுப்பு புள்ளியிட்ட நாடாக உள்ளது.

இக்கட்டான நிலையில் எமது நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது . நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்த நாட்டின் ஒவ்வொருவரும் வெளிநாடுகளுக்குக் கடனாளிகளாக இருக்கின்றோம்.

இது மாற வேண்டும் என்று ஒவ்வொரு குடிமகனும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். கடந்த நான்கு வருடங்கள் மிகவும் இக்கட்டான நிலையில் எமது நாடு காணப்பட்டது. குறிப்பிட்ட ஓர் இனம் கடந்த அரசை தெரிவு செய்தமையால் இறுமாப்புடன் வாழ்ந்தது அதற்கு காரணமாகும். யுத்தக் காலத்தைவிட மிக மோசமான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். அதை விடுத்து புதிய ஜனாதிபதி வந்தார். அவர் வந்து யாவும் அரசியல் மயமாக்கப்பட்ட நிலமையே காணப்படுகின்றது.


அதாவது வன்னித் தொகுதிக்கு ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைக் கொண்டு பலதரப்பட்ட அபிவிருத்தி செய்து வந்தோம். ஆனால் இப்பொழுது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.எம்.எம். நிதிக்காக எமது மக்கள் மத்தியில் அதிகமான வரி சுமைகள் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் பொருள்களின் விலையேற்றம் அதி கரித்துள்ளது. மக்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஐ.எம்.எம். திட்டம் வரும் போது அபிவிருத்தி நல்வாழ்வுத் திட்டங்களை அரசியல் மயப்படுத்த வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் எமது பகுதியில் நேர்மறையான செயல்பாடுகளே இடம்பெற்று வருகின்றன.

இது ஐ.எம்.எம்க்குத் தெரிந்தால் அவர்களின் திட்டங்கள் நிறுத்தப்படும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே வாழ்வாதாரத்துக்கான உதவிகள் செய்யப்படும்போது அரசியல் மயமாகாது இருக்க வேண்டும்.–என்றார்.

# அயோத்தி ராமர் கோயிலை தரிசிப்பதற்கு நாளை முதல் பொதுமக்களுக்கு அனுமதி



அயோத்தி ராமர் கோயிலில் பொது மக்களுக்கான தரிசனம் நாளை ஜனவரி 23 முதல் தொடங்கும் என ஸ்ரீ ராமஜென்மபூமி அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

”அனைத்து பக்தர்களுக்கும் விரிவானத் தன்மையுடன் முறைப்படுத்தப்பட்ட அனுமதியை அளிக்க விரும்புகிறோம். பொது மக்களுக்கான தரிசனம் ஜனவரி 23 முதல் தொடங்கும். ராஷ்டிரிய ஸ்வயம் சேவக், விஷ்வ இந்து பரிஷத் மற்றும் அதன் ஒத்த கருத்துள்ள அமைப்பினருக்கு ஜனவரி 26 முதல் தரிசனம் தொடங்கிறது.

இதுபோன்ற பக்தர்களால் கூட்ட நெரிசலையும் தவிர்ப்பதற்காக ராமர் கோயிலின் தரிசன நேரத்தை இரவிலும் நீட்டிக்க முடிவு செய்துள்ளோம்.

இதன்மூலம், குளிரையும் பொருப்படுத்தாமல், திரளான எண்ணிக்கையில் வரும் பக்தர்களை சமாளிக்க முடியும். ஒரு நாட்டுக்கு ஒருவர் எனும் வகையில் 53 வெளிநாடுகளிலிருந்து அதன் பிரதிநிதிகளும் அயோத்தி தரிசனத்திற்கு வர உள்ளனர்.

இவர்களது நெடுந்தூர விமானப் பயணம் மற்றும் வானிலையை கருதி ஒரே நாளில் அவர்கள் தரிசனம் முடித்துச் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.” – என்றார்.

# ராமர் கோயில் திறப்பு விழா முடிந்ததும் ராகுல் காந்தி தரிசனத்துக்கு வரலாம்

## - அசாம் கோயில் நிர்வாகம் அறிவிப்பு

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி இன்று ராமர் கோயில் திறப்பு விழா முடிந்ததும் சாமி தரிசனத்துக்கு வரலாம் என்று அசாமிலுள்ள படத்ரவா தான் கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து படத்ரவா தான் கோயில் நிர்வாகம் குழு கூறுகையில்,

“அயோத்தி ராமர் கோயிலில் இன்று பிரான் பிரதிஷ்டா நடைபெறுகிறது. அதனால் இங்கு கோயிலுக்கு நிறைய பக்தர்கள் வருவார்கள்.அதுவும் தவிர கோயிலுக்கு வெளியே பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இந்தக் காரணங்களால் ராகுல் காந்தி பிற்பகல் 3 மணிக்கு மேல் தரிசனத்துக்கு வரலாம் என நிர்வாக குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது” என்று



தெரிவிக்கப்பட்டது.

படத்ரவா தான் நிர்வாகக் குழுவின் தலைவர் ஜோகேந்திர நாராயண் தேவ் மஹந்தா, “ராகுல் காந்தி தானுக்கு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் நாளைக்கு 10 ஆயிரம் பேருக்கு மேல் கோயிலுக்கு வரலாம் என்று எதிர்பார்க்கிறோம். அந்த நேரத்தில் ராகுல் காந்தி கோயிலுக்கு வந்தால் அவருக்கு வரவேற்பு அளிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம்.

இன்று நடந்த படத்ரவா தான் நிர்வாகக் குழுவின் கர்நாதர் குழுக் கூட்டத்தில், அவர் நாளை 3 மணிக்கு மேல் வரலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போது அவருக்கு எங்களால் பிரம் மாண்ட வரவேற்பு அளிக்க முடியும்.

இதுகுறித்து உள்ளூர் எம்.எல். ஏ, ஆணையர், பொலிஸ் கண் காணிப்பாளேருக்கு ஏற்கெனவே தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது” என்று கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை காலை முதல் வடகிழக்கு மாநிலத்தில் இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை மேற்கொண்டு வரும் ராகுல் காந்தி இன்று படத்ரவா தானுக்கு செல்ல வேண்டாம் என்று அசாம் முதல்வர் ஹேமந்த பிஸ்வா சர்மா தெரிவித்திருந்தார்.

# தமிழக அரச இந்து விரோத செயல்: நிர்மலா சீதாராமன் கண்டனம்

“தமிழகத்தில் ராமரின் பெயரில் பூஜை, பஜனை, பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்க அனுமதிக்கப்படுவதில்லை. தனியாருக்கு சொந்தமான கோயில்களில் இந்த நிகழ்ச்சிகள் நடத்துவதையும் பொலிஸார் தடுத்து வருகின்றனர். தமிழக அரசின் இந்த இந்து விரோத, வெறுக்கத்தக்க செயலை வன்மையாக கண்டிக்கிறேன்.”

– இவ்வாறு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

உத்தரப் பிரதேசம், அயோத்தியில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டப்பட்டு உள்ளது. இந்த கோயிலின் திறப்பு விழா இன்று நடைபெறுகிறது.

இதுதொடர்பாக நிர்மலா சீதாராமன் தனது எக்ஸ் தளத்தி வெளியிட்டுள்ள பதிவில், “அயோத்தியில் நாளை நடைபெற வுள்ள ராமர் கோயில் நிகழ்ச்சிகளை நேரலையில் ஒளிபரப்பு செய்வதற்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது. தமிழகத்தில் ராமருக்கு 200 இற்கும் மேற்பட்ட கோயில்கள் உள்ளன.

இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் ராமரின் பெயரில் பூஜை, பஜனை, பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்க அனுமதிக்கப்படுவதில்லை.” – என்று பதிவிட்டுள்ளார்.

# அமெரிக்க இராணுவ வீரர்களின் விமான தளத்தின் மீது தாக்குதல்!



மேற்கு ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ வீரர்களின் அல் அசாத் விமான தளத்தின் மீது ஏவுகணைகள் வீசப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தளத்தில் அமெரிக்க இராணுவ வீரர்கள் தங்கியிருந்து பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என கூறப்படுகிறது.

இந்த தாக்குதலினால் அமெரிக்க இராணுவ வீரர்கள் சிலர் காயம் அடைந்துள்ளனர்.

தாக்குதல் தொடர்பில், அமெரிக்க இராணுவம் தெரிவிக்கையில்,

"மேற்கு ஈராக்கில் உள்ள அமெரிக்க படைகளின் தளத்தின் மீது ஏவுகணைகள் வீசப்பட்டன.

பெரும்பாலான ஏவுகணைகள், வான் பாதுகாப்பு அமைப்புகளால் இடைமறிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

ஆனால், சில ஏவுகணைகள் இராணுவ தளம் மீது விழுந்தது. ஈரானின் ஆதரவு பெற்ற அமைப்புகளால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது." என்று தெரிவித்துள்ளது.

# பணயக் கைதிகளை அடைத்து வைத்திருந்த ஹமாஸ் அமைப்பின் சுரங்கம் கண்டுபிடிப்பு



ஹமாஸ் அமைப்பினர் காசாவில் பணயக் கைதிகளை வைத்திருந்த சுரங்கப்பாதையொன்றை இஸ்ரேலிய வீரர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


கடந்த ஒக்டோபர் மாதம் 07 கடத்தப்பட்ட சுமார் 20 பணயக்கைதிகளை அடைத்து வைத்திருந்த ஒரு கிலோமீட்டர் நீளமுள்ள சுரங்கப்பாதையே இவ்வாறு கண்டிபிடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்தித்தின் போது, ஒரு குழந்தை உட்பட மக்கள் பலர் இங்கு பணயக்கைதிகளாக அடைக்கப்பட்டு இருந்துள்ளனர்.

மேலும், கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கத்தில் சிறுவர்களால் வரையப்பட்ட சித்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என இஸ்ரேலிய இராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உலோகக் கம்பிகளுக்குப் பின்னால் ஐந்து குறுகிய அறைகள், கழிப்பறைகள், மெத்தைகளுடன் காணப்படும் இந்த இடத்தின் புகைப் படங்களை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, காசாவில் கான் யூனிஸ்க்கு தெற்கே உள்ள ஹமாஸ் உறுப்பினரின் வீட்டில் இந்த சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாக ஹகாரி தெரிவித்துள்ளார்.



# ஹமாஸ் அமைப்பு வலுவுடனேயே உள்ளது: அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் தகவல்



காசாமீது இஸ்ரேல் பாரிய தாக்குதல்களை நடத்தியபோதிலும் ஹமாஸ் அமைப்பு இன்னும் வலுவுடனேயே உள்ளதாக அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அத்துடன் பல மாதங்களுக்கு இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தும் அளவிற்கு ஹமாஸ் வலுவுடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், அமெரிக்க செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 20 முதல் 30 சதவீத போராளிகளை மட்டுமே ஹமாஸ் அமைப்பு இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. "ஹமாஸ் அமைப்பு இன்னும் வலுவுடன் உள்ளது. தனது தந்திரங்களை மாற்றியமைந்து தொடர்ந்து செயல்பட்டு வருவதாக" தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதகால போரில் 16 ஆயிரம் ஹமாஸ் போராளிகளை காயப்படுத்தினோம் என இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆனால், அமெரிக்க புலனாய்வு அறிக்கையின்படி, 10 ஆயிரத்து 500 முதல் 11 ஆயிரத்து 700 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் பெரும் பாலானோர் விரைவில் போருக்குத் திரும்புவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

(பழுவூரான்)

வெள்ளத்தால் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கான உலர் உணவு பொதி வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் உதவி பொது முகாமையாளர் சுவாமி சுரக்ஷானந்தாஜீ மஹாராஜின் பங்குபற்றுதலுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) கல்லடி முகத்து வாரம், கல்லடி உப்போடை , ஞான சூரியம் சதுக்கம், புதுநகர், திமிலைதீவு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம்பெற்றது.

சாக்ரமெண்டோ தமிழ் மன்ற கலி போர்னியா நிதி பங்களிப்புடனும், அன்பு நெறியின் ஒருங்கிணைப்புடனும் சிவானந்தா தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினால் இது நடை முறைப்படுத்தப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செய லாளரும், சிவானந்தா பழைய மாணவர் சங்கத் தலைவருமான வ. வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சாக்ரமெண்டோ தமிழ் மன் றம் மற்றும் அன்பு நெறி அமைப்புகள் மற்றும் சிவானந்த பழைய மாணவர் சங்கதினருக்கும் இடையில் இணைப் பாளராக தொழில்பட்ட எந்திரி மங்க ளேஸ்வரன், இறைவரி திணைக்கள உதவி பணிப்பாளரும் எமது பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரும் பழைய மாணவர் சங்க கணக்குப் பரிசோதகரு மான த. குணராஜா, மண்முனை வடக்கு பிரதேச செயலக கிராம சேவையாளர் களின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ராஜன், மண்முனை வடக்கு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத் தியோகத்தர்கள் மற்றும் கல்லடி முகத் துவாரம், கல்லடி உப்போடை , ஞான சூரியம் சதுக்கம், புதுநகர், திமிலைதீவு போன்ற கிராம சேவையாளர்கள் பிரிவுகளின் கிராம சேவையாளர்கள், சிவானந்தா பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் சிவானந்தா பட்டமுன் மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







